கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

# சங்கச் சங்கதிகள்



பதிப்பு 5 - கார்த்திகை 2022

w: canberratamilassociation.org.au e: cta1983@hotmail.com

## தலைமைக்குறிப்பு

வாழ்த்துகள்!

கான்பெரா தமிழ் மகளிர் மன்றத்துக்கு (Canberra Tamil Women's Forum (CTWF)) எல்லோர் சார்பாகவும் எங்கள் வாழ்த்துகள்!

கான்பெரா தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடன், ஆற்றல்மிக்க CTWF, கடந்த சில வருடங்களாக மிகவும் சுறுசுறுப்புடனும், உத்வேகத்துடனும் பயனுள்ள நல்ல பல நிகழ்வுகளை நடாத்தி வந்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

கான்பெரா தமிழ்ச்சங்க நிர்வாகக் குழு, கான்பெரா தமிழ் மகளிர் மன்றம் மேலும் சிறப்பாக செயல்பட எவ்வாறு உதவலாம் என்ற நோக்கில், அந்த அமைப்பை எவ்வாறு கான்பெரா தமிழ்ச்சங்க யாப்பினில் (constituition) வரையறுக்கப்பட்ட விதி முறைகளுக்குள் (formalise) முறைப்படுத்தலாம் என்று ஆய்வு செய்தது.

இந்த ஆய்வின் விளைவாகக் கிடைத்த பொருத்தமான தேர்வுகளை (options), நிர்வாகக் குழு CTWF தொண்டர்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தது.

தேர்வுகளைப் பரிசீலித்த CTWF தொண்டர்கள், கான்பெரா தமிழ் மகளிர் மன்றம் ஒரு சுயாதீனமான, தனியான நிறுவனமாக இயங்குவதே, தொலைநோக்குக் கொண்ட சரியான தெரிவாக இருக்கும் என்று முடிவெடுத்துள்ளனர்.

கான்பெரா தமிழ் மகளிர் மன்றம் எடுத்துள்ள முடிவை, கான்பெரா தமிழ்ச்சங்க நிர்வாகக் குழு மதித்து, CTWF சுயாதீனமான, ஒரு தனியான நிறுவனமாக தன்னை நிறுவிக்கொள்ள, முடிந்த உதவிகளைச் செய்ய முடிவு செய்துள்ளது. அத்துடன், கான்பெரா தமிழ்ச்சங்கம், அதன் உறுப்பினர்களையும் தங்கள் ஆதரவை நல்குமாறு வேண்டிக்கொள்கிறது.

இந்த நகர்வு, CTWF இன்னும் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக அமையும் என நம்புவோம். வாழ்த்துவோம்.

உத்தியோகபூர்வமாக உதயமாக இருக்கும் கான்பெரா தமிழ் மகளிர் மன்றத்துக்கு, கான்பெரா தமிழ்ச்சங்கத்தின் நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்!

ஜெயமலசிங்கம்

## இனிவரும் எங்கள் நிகழ்வுகள்

நத்தார் பண்டிகை
10 டிசம்பர் 2022 மாலை 5.00 மணி
Melrose High School Hall
Marr Street, Pearce

## கண்டு பிடியுங்கள்

**கண்டு பிடியுங்கள்!** *(பதிப்பு 4)*

போன புதிரின் விடை:

பத்து குவியல்களையும் ஒரு வரிசையில் வைத்து, முதலாவது குவியலில் இருந்து ஒரு நாணயம், இரண்டாவது குவியலில் இருந்து இரண்டு நாணயங்கள், மூன்றாவது குவியலில் இருந்து மூன்று நாணயங்கள் என தொடர்ந்து சென்று கடைசியாக பத்தாவது குவியலில் உள்ள எல்லா நாணயங்களையும் எடுக்கவும். இவ்வாறு எடுக்கப்பட்ட நாணயங்கள் மொத்தமாக 55 இருக்கும். இந்த 55 நாணயங்களினதும் மொத்த நிறையை காணவும்.

அங்கிருக்கும் எல்லா நாணயங்களும் ஒவ்வொன்றும் பத்து கிராம் என இருந்திருந்தால், மொத்த நிறை 550 கிராம் என இருக்க வேண்டும். ஆனால் ஒரு குவியலில் உள்ள நாணயங்கள் ஒவ்வொன்றும் ஒன்பது கிராம் என இருப்பதால் 55 நாணயங்களினதும் மொத்த நிறை 550 கிராம்களை விட குறைவாக இருக்கும். காணப்பட்ட நிறை 550 ஐ விட ஒன்று குறைவாக இருந்தால், நிறை குறைந்த நாணயங்கள் முதலாவது குவியலில் உள்ளன. 550 ஐ விட இரண்டு குறைவாக இருந்தால் அந்த நாணயங்கள் இரண்டாவது குவியலில் இருக்கும். இவ்வாறு 55 நாணயங்களினதும் மொத்த நிறை, 550 ஐ விட எவ்வளவால் குறைவாக இருக்கின்றதோ அந்த எண்ணுள்ள வரிசையிலுள்ள குவியலில் ஒன்பது கிராம் நாணயங்கள் உள்ளன.

சரியான பதில் அனுப்பியவர்:
1. திரு. அனுலன் சற்குணநாதன்

**DISCLAIMER:** *This newsletter is for informational purposes only. Content of the articles represent the views of the respective authors and the Canberra Tamil Association takes no responsibility for the accuracy of the information in the articles published in this newsletter.*

## வெங்காயமும் வெந்தயமும்

-திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம்



வெங்காயம் சுக்கானால்
வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை
மங்காத சீரகத்தைத் தந்தீரேல்
வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே

இப்பாடல் காளமேகப் புலவரால் பாடப்பட்டது. சிலேடை என்ற பாவகை தமிழில் உள்ளது. சிலேடை என்பது இரட்டைக்கருத்தில் ஒரு பாடலைப்பாடுவதாகும். நாம் கதைக்கும் போதும் இரண்டு அர்த்தத்தில் கதைத்தால் அதை சிலேடை பேச்சு என்று சொல்லுவோம்.

மேற்கூறிய பாடலில் திருவேரகத்தில் உள்ள மளிகைக்கடை வைத்திருக்கும் ஒரு வியாபாரியைப் பார்த்துப்பாடல் பாடுவதாகவே நாம் நினைத்துக்கொள்ளுவோம். வியாபாரியை செட்டியார் என்று கூறும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.

ஆனால் ஆழமாகப்பார்த்தால் திருவேரகம் என்று அழைக்கப்படும் ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலையில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமானை நோக்கிப்பாடுவதாகவே அமைந்துள்ளது .

இனிப் பாடலுக்கு வருவோம். முதலில் மேலோட்டமாகப்பார்த்தால் ஜீரணக் கோளாறை நீக்குவதற்கு வெங்காயம், வெந்தயம், பெருங்காயம், சீரகம் என்பவற்றை போட்டு ரசம் தயாரிப்பார்கள். இதில் வாங்கி வந்த வெங்காயம் சுக்கை போல (இஞ்சி) காய்ந்து விட்டால் வெந்தயம் இருந்தும் பயனில்லை என்று வியாபாரிக்கு ஒருவர் சொல்லுகிறார்.

இங்கு சிலேடை கருத்தாக வருவதை பாருங்கள். திருவேரகத்தில் உள்ள பெருமானே! வெறும் இந்த உடல் (காயம் என்பது உடம்பு) வாடிவதங்கி விட்டால் அதனால் பயனேது? வெறும் உடம்பிற்கு மதிப்பில்லை. சுக்கு போல மாறிய உடலுக்கு வெந்த + அயம் சத்தைத் தரும் பஸ்பமே கொடுத்தாலும் உயிர் வராது. ஆகவே மோட்சம் தரும் நிலையை சீரகம் என்பது சீர் பொருந்திய உன் திருவடிகளை தருவாயானால் பெருமைமிக்க நல்ல உடலைத்தா என்று கேட்க மாட்டேன்.

பெரும் + காயம் - நல்ல + உடல். பாடலையும் பொருளையும் மீண்டும் மீண்டும் படித்தால் சிலேடை கருத்தை விளங்கி கொள்ளலாம்.


## கல்கியின் பொன்னியின் செல்வனும் மணிரத்னத்தின் PS 1ம் என் பார்வையில்:

திருமதி அனிதா ஜெயசிங்கம்

நான் முதலாம் பதிப்பில் பொன்னியின் செல்வன் நாவல் பற்றி எழுதியிருந்தேன். நாங்கள் எல்லோரும் மிகவும் எதிர் பார்த்திருந்த திரைப்படமும் வந்தேவிட்டது. எத்தனையோ பேர் எடுக்க முற்பட்ட படத்தை மணிரத்னம் அவர்கள் இயக்கியிருக்கிறார். இதை விட இந்த நாவலை சிறப்பாக வேறு யாராவது எடுத்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். அதேபோல கதையிலுள்ள கதாபாத்திரங்களுக்கு இப்படத்தில் நடித்தவர்களை விட வேறு யாராவது பொருந்தியிருப்பார்களா என்பதும் சந்தேகம்தான்.

கல்கியின் நாவல் வந்தியத் தேவனின் பயணத்துடன் ஆரம்பிக்கின்றது. ஆனால் படம் ஆதித்த கரிகாலனின் ராஷ்டகூடர்களுடனான போருடன் ஆரம்பிக்கின்றது. அப்போது எம்மனதில் இடம் பிடித்த ஆதித்த கரிகாலன் கடைசிவரை இறங்கவேயில்லை. அவருடைய ஆக்கிரோஷம், கோவம், வெறுப்பு, அதற்கான காரணம், இவற்றை விக்ரத்தைவிட வேறு யாராவது காட்டியிருப்பார்களா என்றால் சந்தேகம்தான்.

எவ்வளவு மனக்குமுறல்கள். அவ்வளவற்றையும் முகத்திலும் வார்த்தைகளிலும் காட்டும் நந்தினி, சோழ நாட்டின் இளையபிராட்டி அறிவும், ஆற்றலும், அழகும் நிறைந்த குந்தவை, கடல், காடு என்று திரியும் சமுத்திர குமாரி பூங்குழலி. இவர்களை அப்படியே பிரதிபலிக்கும் ஐஸ்வர்யா ராய், திரிஷா, ஐஸ்வர்யா லக்ஷிமி.



குந்தவையும் நந்தினியும் சந்திக்கும் காட்சியை கல்கி, “இரண்டு நிலாக்கள் ஒரே சமயத்தில் உதயமாயின” என்கிறார். மேலும், “நந்தினி பொன்வர்ண மேனியாள்; குந்தவை செந்தாமரை நிறத்தினள். நந்தினியின் பொன்முகம் பூரண சந்திரன் போல வட்டவடிவமாக இருந்தது. குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல நீளவட்டமாக இருந்தது” என்று தொடங்கி கண், மூக்கு, இதழ்களில் இருந்து போட்டிருந்த தலை அலங்காரம் வரை வர்ணித்தது ஒரு பெரிய பந்தியில். அதை அப்படியே திரிஷா மற்றும் ஐஸ்வர்யா ராயின் ஒப்பனைக் கலைஞர்கள் அவர்களில் கொண்டுவந்திருந்தார்கள்.

அவர்களின் சந்திப்பும் உரையாடலும் இரண்டு சக்திவாய்ந்த பெண்கள் வாள்களால் உரசிப் பார்ப்பதைப் போலிருந்தது என்றால், குந்தவையும் ஆதித்த கரிகாலனும் சந்திக்கும் காட்சி உணர்ச்சிப் பிழம்பாக இருந்தது. தன் காதலைப் பிரித்துவிட்டதாக தங்கையைப் பேசும் அண்ணனும், சோழ நாட்டு மக்களின் நலனைப் பார்க்கையில் நீ, நான், ஏன் அரசர் சுந்தர சோழர் கூட பெரிதில்லை என்று ஒரு அரசிளம் குமாரியாகப் பேசும் தங்கையும், அவளின் பேச்சில் இருக்கும் நியாயம் தெரிந்தும் தவித்து கடைசியில் பக்கத்தில் வந்து அமரும்படி அழைக்கும் அண்ணனும்! நிச்சயமாக எனக்கு கல்கி அல்ல மணிரத்னம் தான் தெரிந்தார்.

தஞ்சை மற்றும் பழையாறை அரண்மனைகளை பலவர்ண நிறங்களுடனும் பல சந்தோஷமான மக்களுடனும், இரகசியங்கள் நிறைந்த பழுவேட்டரையரின் அரண்மனையை இரவிலும் ஆனால் அழகாகவும் காட்டி எம்மை ஒரு மாய உலகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

படத்துக்கு பலம் சேர்த்தது ARRன் இசை என்றால் அது மிகையாகாது. பாண்டிய மன்னன் கொல்லப்படும் இடத்திலும் சூரைக் காற்றில் கப்பல் சிக்கிய காட்சியிலும் எங்களை இருக்கை நுனிக்கு அழைத்து வந்து விட்டார் என்றால், நந்தினி வரும் இடங்களில் மனதைப் பிசையும் இசையிலும், ஆண்டாளின் பேச்சு வரும் இடங்களில் பாசுரங்களின் இசையிலும் எங்களை கட்டிப் போட்டுவிட்டார்.

படத்தில் சின்ன, சின்ன விடயங்களில்கூட மிகுந்த கவனம் எடுத்திருந்தார்கள். கல்கி அவர்களின் கற்பனையில் உதித்த சோழவள நாட்டை எம் கண்முன் மிக அழகாகவே கொண்டுவந்தார்கள். அவற்றைப் பற்றியும் எனக்கு இருந்த சில உறுத்தல்கள் பற்றியும் அடுத்த இதழில் எழுதுகிறேன்.

## தமிழ் சினிமா மீண்டும் மலர்ந்துள்ளது

- ராகவன் சிவபாலன்

சங்கச் சங்கதிகள் பதிப்பு-2ல் நான் எழுதிய பகுதியில் ஒரு கேள்வி கேட்டேன்: "இந்தியாவே கொண்டாடிய கொலிவுட் எங்கே?"

அதற்கான விடை 2022ல் இரண்டு Industry Hit மூலமாக கிடைத்துள்ளது. ஒரு Industry Hit திரைப்படம் என்பது ஒரு வசூல் சாதனையை முறியடிக்கும் படம். உலகெங்கும் 2018ல் வெளியான ரஜினிகாந்தின் எந்திரன் box officeல் முதல் இடத்தில் இருக்கின்றது. தமிழகத்தில் விஜய்யின் பிகில் முதல் இடத்தில் இருந்தது. (பாகுபலி 2-இந்த பட்டியலில் இருந்து நீக்கபட்டுள்ளது)

ஆனி மாதத்தில் வெளியான கமல்ஹாசனின் விக்ரம் 2022 ஆண்டின் முதல் industry hit ஆக அமைந்துள்ளது. இந்த படத்தை பற்றி மீனாட்சி சவரிமுத்து பதிப்பு-3ல் விளக்கமாக ஒரு பகுதியை எழுதியுள்ளார்.

சமீபத்தில் வெளியான பொன்னியின் செல்வன்-1 2022 ஆண்டின் இரண்டாம் industry hit ஆக அமைந்துள்ளது. இந்த படத்தை கிட்டத்தட்ட 50 வருடமாக MGR காலத்தில் இருந்து தமிழ் சினிமாவில் உருவாக்க பல முயற்சிகள் பலர் எடுத்தார்கள். கடைசியாக மணிரத்னத்தின் விடாமுயற்சி, விஸ்வரூபவெற்றியில் முடிந்துள்ளது!

விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, ஐஸ்வர்யா ராய் பச்சான், திரிஷா மற்றும் மிகச்சிறந்த நடிகர்கள் நடித்த இந்த காவியத்தின் வெற்றிக்கு மிகப்பெரிய காரணம் மணிரத்னம் மற்றும் இளங்கோ குமாரவேளின் திரைக்கதை. கல்கியின் நீளமான கதையை இரண்டு பாகங்களாக எடுப்பது பாராட்டவேண்டிய விஷயம்.
AR ரகுமானின் இசையும், ரவி வர்மனின் ஒளிப்பதிவும் சிறப்பு! இந்த படம் தமிழர்கள் கொண்டாடவேண்டிய படம்!

தமிழகத்தில் முதல் இடத்தில் இருக்கும் பொன்னியின் செல்வன் 1, உலக box officeல் எந்திரன் திரைப்படத்தை முந்துமா?

பொன்னியின் செல்வன் 2 அடுத்த வருடம் வெளியாகும் வரை காத்திருப்போம். அதற்குள் விஜய்யின் வாரிசு, அஜித்தின் துணிவு மற்றும் ரஜினிகாந்தின் ஜெயிலர் படங்கள் வெளியாகும்.

ஒரே வருடத்தில் மூன்று படங்கள் வெளியாகி சூப்பர் ஹிட் குடுத்த கார்த்திக்கும் 2022 ஒரு சிறந்த வருடமாக அமைந்துள்ளது. விருமன், பொன்னியின் செல்வன் 1, சர்தார் ஆகிய மூன்று வெவ்வேறு வகையான படங்களிலும் வசீகரமாக நடித்த கார்த்திக்கும் வாழ்த்துகள்!





# கவிதைப் பெட்டகத்தில் இருந்து...


- *ஆழியாள்*

இரு பெருங் கவிஞர்கள் ‘மின்னல்’ எனும் தலைப்பை எப்படித் தத்தமது படைப்பு மொழியில் கவிதையாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக சென்ற இதழில் பிரமிளுடைய கவிதையைப் பார்த்தோம். இம்முறை மு.பொன்னம்பலத்தின் கவிதையை எடுத்துக் கொள்வோம்.

## மின்னல்

**யன்னல் இடுக்கிடையே**
**மின்னல் தெறிக்கிறது!**
**பருக விழிவாயின்**
**கதவு திறபடுமுன்**
**நழுவும் அணில் வாலா?**
**அரவின் எயிற்றிடையே**
**நெரியும் தவளையின் கால்**
**கிண்ணி நடுக்கமென –**
**இல்லை,**
**அச்சத்துக் கழகெங்கே?**
**சாவுக்கு ஒளியேது?**
**அது,**
**சாவின் நிழலல்ல!**
**நினைவிற்குள் நிற்காது**
**நெஞ்செல்லாம் தானாகி**
**உருவில்லா மன்மதனாய்**
**ஒளிந்தும் தெரிந்தும்**
**கஞ்சத்தனம் தன்னைக்**
**காட்டப் புரிவதனால்**
**தன்பால் எமையிழுக்கும்**
**இன்பப் புதுக்கவியா?**
**மின்னல் கவிதையா?**
**அல்ல –**
**கவிதைக்குள் சிக்காது**
**கவிநெஞ்சு புரிகின்ற**
**காலத்தின் நேரத்தின்**
**கட்டுக்கு மேலாக**
**நிற்கும் ஒரு துடிப்பின்**
**நிழலாய்,**
**வானப் பெருநீரில்**
**வெட்டும்**
**நீர்க் கோடு!**

**-மு.பொன்னம்பலம்-**



இக் கவிதை தர்க்கத்தின் வழிப்பட்டு நகர்க்கிறது. அதாவது முதலில் மின்னல் என்பது என்னவாக இருக்கும் என்று கேள்வியை எழுப்புவதன் மூலம் கவிஞர் தன் உசாவலைத் தொடங்குகிறார். அது *‘நழுவும் அணில் வாலா?’*, *‘தவளையின் கிண்ணிக் கால் நடுக்கமா?’*, *‘உருவில்லா மன்மதனா?* அல்லது அதுவோர் *‘இன்பப் புதுக் கவிதையா’* என்பதோடு வெறுமனே நிறுத்திவிடாமல் பல உட் கேள்விகளைக் கேட்பதன் மூலம் அச்சம், சாவு, அழகு பற்றிய கிளை விவாதங்களுக்கும் இட்டுச் செல்கிறார். அவற்றினூடாக பாடுபொருளுக்கான விளக்கத்தை அல்லது அதை அணுகும் முறையை தர்க்கத்தின் வழி நுட்பமாகப் பிரித்தெடுப்பதன் மூலம் கண்டடைகிறார்.

காலத்துக்குள்ளும், கவிதைக்குள்ளும் சிக்கிக் கொள்ளாமல், கட்டுகளில் இருந்து விலகி, மேலாக மிதந்து நிற்பதற்குக் கவி நெஞ்சம் படுகின்ற ஆன்ம அவஸ்தைகளை, அதன் தேடல்களைத் ‘துடிப்பு’ என்றும், அத் துடிப்பின் நிழலே மின்னல் என்றும் சொல்லப்படுகிறது. ஆன்ம விடுதலைக்கான தேடலின் ‘நிழலே’ இத்தனை ஒளியோடு இருக்குமென்றால், அதற்கான உண்மையான தேடல் எத்தனை கோடிச் சூரியர்களின் சோதிப்பிழம்பாய் இருக்கும் என்பது மகானுபவத்தின் பாற்பட்டது. இவ்வாறு மின்னல் என்பது என்ன என்ற முடிவுக்கு கவிதை வந்தடைகிறது.

இதைவிட வானத்தை பெரும் நீர்ப்பரப்பாகவும், மின்னலை - வெட்டும் நீர்க் கோடாகவும் கவிஞர் உருவகித்திருக்கும் *‘வானப் பெரு நீரில் வெட்டும் நீர்க் கோடு’* என்ற வரிகள் மேற்கோளாகப் பயன்படுத்தப்படுவது மட்டுமல்ல, அவை கோயில்களில் நடக்கும் ஆடி மாதத்து நீர்வெட்டு நிகழ்வையும் ஞாபகத்தில் வந்து அருட்டிச் செல்கிறது. இவ்வாறான கீழைத்தேயப் பண்பாட்டுக் கூறுகளை இணைக்கும் சொற்தேர்வுகளும், உத்திகளும், பார்க்கப் பார்க்க விரிவு கொள்ளும் கவிச் செழுமையும் முபொவை காலங் கடந்த கவிஞனாக்குகிறது.

## கண்டு பிடியுங்கள்

## கண்டு பிடியுங்கள்!




ஓரிடத்தில் மூன்று உலோக கொள்கலன்கள் இருக்கின்றன. பெரியது எட்டு லிட்டர், சிறியது மூன்று லிட்டர் மற்றும் இடைப்பட்டது ஐந்து லிட்டர் கொள்ளக்கூடியவை. இவற்றில் எந்தவித அளவுகளும் குறிக்கப்படவில்லை. பெரியதில் முற்று முழுதாக எண்ணெய் நிரம்பி உள்ளது. மற்றைய இரண்டு கொள்கலன்களும் வெறுமையாக இருக்கின்றன. மூன்று கொள்கலன்களுமே ஒன்றிலிருந்து மற்றையதற்கு எளிதாக திரவங்களை ஊற்றக்கூடியவகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மூன்று கொள்கலன்களையும் மட்டுமே பாவித்து, அதி குறைந்த எண்ணிக்கையான படிகளில் (steps) பெரிய இரண்டு கொள்கலன்களிலும் தலா நான்கு, நான்கு லிட்டர் எண்ணெய் இருக்கும்படி செய்ய வேண்டும். முயன்று பாருங்கள்.

உங்கள் பதில்களை cta1983@hotmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். சரியான பதில்களை அனுப்பும் முதல் மூன்று நபர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

# கதை சொல்லும் கலை

**- *யோகன்***

வில்லுப்பாட்டு பரவலாக கிராமங்கள் தோறும் நிகழ்த்தப்பட்ட பராம்பரியக் கலை. கதை சொல்லும் திறமையால் மக்களை கவர்ந்திழுத்த வில்லுப்பாட்டுக் குழுக்களும் பல இருந்தன. நல்ல தமிழில் உரையாடுவது, இராகத்துடன் பாடுவது, கதைக்கேற்ப நடிப்பது என்ற மூன்று திறமைகளும் கொண்டவரே கதை சொல்பவர். இதைவிட கதையின் நடுவே ஆமாம் போடுபவர், இடையே கேள்வி கேட்பவர் என்றெல்லாம் கதையை சுவாரஸ்யமாக நகர்த்த வில்லுப்பாட்டுக் குழுவில் முன்வரிசையில் வில்லுக்குப் பின்னால் இவர்கள் அமர்ந்திருந்தனர். பாட்டுக்கு ஆர்மோனியமும், மிருதங்கம் அல்லது தபேலாவுடன், கடம், மற்றும் கஞ்சிரா வாத்தியங்களும் கூட பயன்பட்டன.

நான் அறிந்த காலத்தில் வில்லிசை நிகழ்த்தியவர்களில் முதன்மையாக சின்னமணி என்றழைக்கப்பட்ட நா. கணபதிப்பிள்ளை அவர்களே நினைவுக்கு வருகின்றார். அவர் ஒரு தேர்ந்த நடிகர் என்பது மட்டுமல்ல நல்ல தமிழில் பேசவும், பாடவும் தெரிந்த ஓர் ஆசிரியரும் கூட. கோயில்களின் திருவிழாக் காலங்களில் பாரத, இராமாயணக் கதைகளும், வள்ளி திருமணமும், சத்தியவான் சாவித்திரி கதையும் அவரது வில்லிசையில் கேட்டோம். கலைவாணர் வில்லிசைக்குழு என்ற அவரது குழுவின் வில்லுப்பாட்டுக்கு பெருந்திரளாக கூட்டம் வரும்.


வில்லிசைக் கலைஞர்
நா.கணபதிப்பிள்ளை

சின்னமணியின் காலத்தில் வில்லுப்பாட்டுப் போட்ட பல குழுக்கள் இருந்தன ஆனால் சின்னமணி மட்டும் திரை இசையைத் தழுவி எழுதப்பட்ட பாடல்களைத்தவிர்த்து பாரம்பரிய இசையைத் தழுவிய தனித்துவமான பாடல்களையே அதிகமாக பயன்படுத்தினார். அவரது வில்லுப்பாட்டில் நீண்ட உரையாடல் இருக்காது.ஒரு ஐந்தாறு வசனங்கள் பேசி முடிந்ததுமே அடுத்த பாடலை எடுத்து விடுவார்.

எமது நவாலியூரில் வாழ்ந்து பின்னர் ஜெர்மனியில் மறைந்த நகைச்சுவை நடிகர் ஐசக் இன்பராஜா அப்போது சின்னமணியின் வில்லிசைக்குழுவில் இருந்தவர். அவர் வீட்டில் நடந்த ஒரு திருமண நாலாஞ் சடங்கு அன்று இரவு வீட்டு மண் முற்றத்தில் சிறு மேடை போட்டு சின்னமணியின் வில்லுப் பாட்டு வைத்ததை போய்ப் பார்த்தேன். அயலவரும் உறவினரும் வீட்டு முற்றத்தையும் நிறைத்து வேலிக்கு வெளியிலும் ஆட்கள் திரண்டிருந்தனர். வில்லுப்பாட்டு சமூகத்துடன் அந்நியோன்னியமான ஒரு கலை என்று அன்றைக்கு தெரிந்தது.

மத வேறுபாடின்றி வில்லுப்பாட்டுக் கலையை ஒரு வலிமையான கதை சொல்லும் கலையாக யாவரும் கையாண்டனர். கிறீஸ்தவர்களுக்கு புனித நாளான உயிர்த்த தினத்தில் இயேசு உயிர்த்த கதையை வில்லுப்பாட்டாக அல்லது பஜனையாக நிகழ்த்துவதும் வழமையாக இருந்தது.

அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்படுமுன்னர், புராண இதிகாசங்கள் ஏட்டுச் சுவடிகளில் மட்டுமே இருந்த காலத்திலிருந்து மக்களுக்கு தலைமுறை தலைமுறையாக வாய் மூலமே கதைகள் சொல்லப்பட்டன. இன்றும் வில்லுபாட்டு வாழும் கலைதான். சிறுவர்களாலும், வளர்ந்தோராலும் அது இங்கும் நிகழ்த்தப்படுவதைக் காண்கிறோம்.

எழுத வாசிக்க அறியாத பாமர மக்களும் கேட்டுச் சுவைக்க கதைகள் சொன்ன கலைஞர்கள் வாய் வழியாக புராணங்களையும், இதிகாசங்களையும், சரித்திர சமூகக் கதைகளையும் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். சின்னமணி மறைந்து விட்டார். ஆனால் அவர் சொன்ன கதைகள் நினைவில் உள்ளன.

# தொழில் முனைவர்களுடனான நேர்காணல்

**எமது சமூகத்திலுள்ள தொழில் நிறுவன அதிபர்களுடன் உரையாடுவது என்ற வகையில் இம்முறை Canberra Auto Services உரிமையாளர் திரு பத்மநாதன் ரவீந்திரன் அவர்களுடன் உரையாடினோம். அவர் பகிர்ந்து கொண்ட எண்ணங்களை இங்கே தருகிறோம்.**

***கன்பராவில் கார் திருத்தும் பணியை செய்து வரும் உங்களுக்கு எப்படி இந்த தொழிலில் ஈடுபடுவதற்கு உந்துதல் ஏற்பட்டது?***

நான் இலங்கையில் இருந்தபோதே Vehicle Transport Manager ஆக கம்பஹாவிலுள்ள ஒரு நிறுவனத்தில் வேலை செய்தேன். கார்களை அந்த நிறுவனத்தின் உயரதிகாரிகளின் பாவனைக்காக அனுப்புவதற்கு முன்னர் அவற்றையெல்லாம் சரி பார்த்து உறுதி செய்து கொண்ட பின்னர் சுமார் 25 கார்கள் மட்டில் ஒன்றாக சேர்த்து அனுப்புவோம். அதற்கு நானே பொறுப்பாக இருந்ததால் அப்போதிலிருந்தே எனக்கு கார்களைப் பராமரிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் திறமையும் ஆர்வமும் இருந்தது. அவுஸ்திரேலியாவுக்கு visa எடுத்து வருவதற்கும் இந்த தொழில் அனுபவம் எனக்கு உதவியது. 2008 இல் கன்பராவுக்கு வந்தபோது Canberra Toyota இல் எனக்கு வேலை கிடைத்தது. பின்னர் 2010 இல் இந்த **Canberra Auto Services** ஐ ஆரம்பித்து கார் திருத்தும் தொழிலை பகுதி நேரமாக செய்து வருகிறேன். அத்துடன் நான் முழு நேரமாக Toyota நிறுவனத்திலும் பணி புரிகிறேன்.

***கார்களில் நாளாந்தம் பயணிக்கும் எம்மைப் போன்றவர்களுக்கு கார்களை பராமரிப்பது பற்றி அடிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டியவை எவை எனக் கருதுகிறீர்கள்?***

கார்களுக்கு அடிப்படையாக எரிபொருள் நிரப்புவது மட்டுமன்றி நாங்களாகவே மாதமொரு முறை பின்வரும் விடயங்களை சரி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். காரின் எஞ்சின் வெப்பத்தைக் குறைக்கும் குளிரூட்டி (coolent) , எஞ்சினின் உராய்வை தடுக்கும் எண்ணெய் (oil), டயர்களுக்குத் தேவையான காற்றழுத்தம் (air pressure) மற்றும் டயர்களின் தேய்மானம் என்பவையே முக்கியமானவை. அதிலும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கார்களாயின் இவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இன்னும் குறிப்பாக நீண்ட தூரம் பயணங்களுக்கு முன்னர் இவற்றை சரி பார்த்துக் கொள்வதும் அவசியம்.

***எவ்வளவு காலத்திற்கொரு தடவை கார் பராமரிப்பு சேவைக்கு செல்ல வேண்டுமென்று கருதுகிறீர்கள்.***

சராசரியாக 6 மாதத்திற்கு ஒரு தடவை அல்லது ஒவ்வொரு 10,000 கி.மீ ஓடியதும் பராமரிப்பு சேவை செய்ய வேண்டும். இதில் எது முதலில் நிகழ்கிறதோ அதற்கேற்ப பராமரிப்பு சேவைக்கான திகதியும் மாறுபடும். உதாரணத்திற்கு குறைவாக காரை பாவிக்கும் சிலருக்கு 10,000 கி.மீ ஓடுவதற்கு 2 வருடங்கள் எடுக்கலாம். அதற்காக 2 வருடங்கள் பராமரிப்பு சேவையைப் பின் போடக்கூடாது. அவர்களும் 6 மாதத்தில் பராமரிப்பு சேவை செய்யத்தான் வேண்டும். இல்லாவிடில் அந்தக் காரின் எஞ்சின் எண்ணெயின் (oil) தரம் குறைந்து போய் எஞ்சினுக்கு பாதிப்புகள் ஏற்படலாம்.

***அவுஸ்திரேலியாவில் கார் உற்பத்தி நின்று போய் விட்டது. எதிர் காலத்தில் புதிய மின்சார வண்டிகள் பாவனைக்கு இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.***

அவுஸ்திரேலியத் தயாரிப்பான Holden உற்பத்தியை நிறுத்தி விட்டது. பிறகு Toyota வும் தனது உற்பத்தியை அவுஸ்திரேலியாவில் நிறுத்தியது. இறக்குமதியாகும் கார்களே விற்பனையிலுள்ளன. மின்சார வண்டிகளின் பாவனையில் நாம் ஆரம்ப கட்டத்திலுள்ளோம். அவற்றின் விலை தற்போது அதிகமாயுள்ளது. அத்துடன் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கக் கூடிய பட்டரிகள் எதிர் காலத்தில் கண்டு பிடிக்கப்படலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவுஸ்திரேலியாவில் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 470 km வரை பட்டரியில் ஓடக்கூடிய மின்சார வண்டியொன்றை மிக அண்மையில் நாங்கள் எமது பணியகத்தில் சோதித்துப் பார்த்ததை இங்கு குறிப்பிடலாம். எதிர்காலத்தில் மின்சாரக் கார்களை பொறுத்த வரையில் இந்த வளர்ச்சியை படிப்படியாக காணலாம் என்றே நினைக்கிறேன்.

***கன்பராவில் உங்கள் தொழில் அனுபவங்களை பற்றி சொல்லுங்கள்.***

நான் எனது வாடிக்கையாளர்களின் கார்களை எனது வீட்டில் பாராமரிப்பு/பழுது பார்க்கும் தொழிலைச் செய்து வருகிறேன். சில சமயங்களில் அவர்களால் காரைச் செலுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்திருந்தால் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்குச் சென்று அங்கேயே பழுது பார்க்கும் பணியையும் செய்கிறேன். தேவையேற்படின் இழுவை வண்டியை (Tow truck) ஒழுங்கு படுத்தியும் சில திருத்த வேலைகளை செய்து வருகிறேன். இதை விட கார்களுக்கு Parking sensor, Reverse camera, Dash cam போன்ற நவீன கருவிகள் இல்லாதவிடத்து அவற்றை பொருத்துவதற்குமான வேலைகளையும் செய்து கொடுக்கிறேன்.

***மக்கள் சாதாரணமாக மற்றைய கார் மொடல்/மேக்குகளை விட ஏதாவது ஒருகுறிப்பிட்ட கார் மொடல்/மேக் ஐ சிறந்ததென்று கூறுவதுண்டு. இது பற்றி உங்கள் கருத்தென்ன?***

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் ஜப்பானிய, அல்லது கொரிய தேசத்துக் கார்களுக்கு உள்ள மதிப்பு ஐரோப்பியக் கார்களிலும் அதிகமாகவுள்ளது என்றே கருதுகிறேன். பழுது பார்ப்பதற்கு இலகுவாகவிருப்பது, நீண்ட காலப் பாவனைக்குரியது என்ற வகையில் நான் சொல்வது பொருத்தமானது என்றே கருதுகிறேன். இதைவிட ஜப்பானிய அல்லது கொரிய கார்களுக்கு உதிரிப் பாகங்களை இங்கே பெற்றுக் கொள்வது இலகுவானதாகவிருக்கும் என்பதும் இன்னொரு காரணம்.




## Volunteering opportunities

**Multiple fundraiser events**

We are always looking forward to help from the community for our various fundraising activities. There are numerous events which require support from our community to give back to charities, both locally and abroad. If you are interested in helping at our next event, please get in contact with a CTA executive committee member , or send us an email!

**ThendralFM Radio (91.1FM)**

ThendralFM continues to actively recruit radio hosts for our adult and youth programs.

Please get in contact with Raagavan Sivapalan on 0424 434 474 if you are interested in participating or would like further information.

**Your feedback is important to us!**

Please let us know your thoughts on this newsletter through either letting a contributor know or by emailing us at cta1983@hotmail.com